# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

-----

பதிவெண் [ | | | | | ]

## வகுப்பு 10

## PART - I - மொழிப்பாடம் - தமிழ் தாள் 1

நேரம்: 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 100

**அறிவுரைகள்:**
1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு:** *i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.*
*ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.*

### பகுதி - I (மதிப்பெண்கள் - 14)

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**
**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) ''அன்னை மொழியே'' கவிதை இடம் பெறும் நூல்
அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து

2) ''பாட்டுக்கொரு புலவன்'' எனப் பாராட்டப்பட்டவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

3) திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?
அ) பாவாணர் ஆ) கால்டுவெல் இ) இரா. இளங்குமரனார் ஈ) திரு.வி.க.

4) '<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

5) உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்
அ) திருமூலர் ஆ) அகத்தியர் இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர்

6) இனிய வாசனையுடன் வா என்று பாரதி அழைத்தது யாரை?
அ) காற்று ஆ) மேகம் இ) குழந்தை ஈ) அருவி

7) **சரியான கருத்தைக் கண்டறிக.**
i) தான் மட்டும் உண்பது என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.
ii) விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.
iii) நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு.
அ) (i) சரி ஆ) (ii), (iii) - சரி இ) மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு

8) நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?
அ) கொன்றை வேந்தன் ஆ) காசிக்கலம்பகம்
இ) வெற்றி வேற்கை ஈ) காசிக்காண்டம்

9) மலைபடுகடாம் எத்தனை அடிகளைக் கொண்ட நூல்?
அ) 483 ஆ) 543 இ) 583 ஈ) 643

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (10, 11, 12, 13, 14) விடை தருக.**

நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட் புலம்புஅகல இனிய கூறிப்
பருஉக்குறை பொழிந்த நெய்க்ண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப்பொம்மல் பெறுகுவிர்

10) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) பரிபாடல் ஆ) முல்லைப்பாட்டு இ) மலைபடுகடாம் ஈ) புறநானூறு

11) 'இறடி' - இச்சொல்லுக்குரிய பொருள் யாது?
அ) சோறு ஆ) தினை இ) இறைச்சி ஈ) அரிசி

12) மலைபடுகடாம் இவ்வாறும் அழைக்கப்படுகிறது.
அ) பொருநராற்றுப்படை ஆ) சிறுபாணாற்றுப்படை
இ) கூத்தராற்றுப்படை ஈ) பெரும்பாணாற்றுப்படை

13) கெழீஇ - இச்சொல்லில் உள்ள அளபெடை
அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

14) மலைபடுகடாம் எவ்வகை இலக்கியத்தைச் சார்ந்தது?
அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்
இ) காப்பிய இலக்கியம் ஈ) சிற்றிலக்கியம்

## பகுதி - II (மதிப்பெண்கள் - 20)

### பிரிவு - 1

***எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:*** **5×2=10**

15) 'இலா' என்னும் மென்பொருள் குறித்து எழுதுக.

16) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

17) தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

18) தாவரங்களின் நுனிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள் யாவை?

19) தென்றல் காற்று குறிப்பு வரைக.

20) **விடைக்கேற்ற வினா அமைக்க:**
அ) உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது.
ஆ) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.

21) மொழிபெயர்ப்பால் திருக்குறள் அடைந்த பெருமை யாது?

### பிரிவு - 2

***எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:*** **5×2=10**
***(28வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)***

22) கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்? ஏன்?

23) பண்டைய தமிழ்க் கலைஞர்கள் யாவர்?

24) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

25) **பொருளுக்கேற்ற அடியைப் பொருத்தி எழுதுக:**

| | |
|---|---|
| முன்னைக்கும் முன்னை | மிகுதியான வணிகக்கப்பல்கள் |
| தென்னன் மகளே | நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் |
| மெத்த வணிகலமும் | பழமைக்குப் பழமையாய் |
| நெல்லோடு நாழி கொண்ட | பாண்டிய மன்னனின் மகளே |

26) "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்"
இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்?
காதல் மிகு கேண்மையினான் யார்?

27) அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.

28) **'விடும்'** என முடியும் குறளை அடிமாறாமல் எழுதுக.

## பகுதி - III (மதிப்பெண்கள் - 50)

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் *விடையளிக்க:*** **3×5=15**

29) வாழை இலை விருந்து, உணவு பரிமாறும் முறை - குறித்து எழுதுக.

30) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

31) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

32) நான் வீசுகின்ற திசையைக் கொண்டும் தமிழர்கள் எனக்குப் பெயர் சூட்டியுள்ளனர் - இத்தொடர் குறித்து விளக்கி எழுதுக.

33) இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதைச் சான்றுடன் விவரிக்க.

### பிரிவு - 2

**எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் *விடையளிக்க:*** **3×5=15**

34) தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

35) கா.ப.செய்குதம்பிப் பாவலர் சதாவதானி எனப் புகழப்படுவதையும் அதற்கான காரணத்தையும் எழுதுக.

36) ............... 'நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்'' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

37) ''மாளாத காதல் நோயாளன் போல்'' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

38) முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல், கரு, உரிப்பொருள்களை எழுது.

### பிரிவு - 3

**அனைத்து வினாக்களுக்கும் *விடையளிக்க:*** **4×5=20**

39) பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) | திருவிளையாடற்புராணம் | அதிவீரராம பாண்டியர் |
| ஆ) | பூத்தொடுத்தல் | திருவள்ளுவர் |
| இ) | பரிபாடல் | பரஞ்சோதி முனிவர் |
| ஈ) | திருக்குறள் | உமா மகேஸ்வரி |
| உ) | காசிக்காண்டம் | கீரந்தையார் |

40) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மைச் செய்திகள் சங்க, இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. இதுவும் பிற மொழிக்கருத்துகளை, கதைகளை, தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்டவையே.

**வினாக்கள்:**

1. இப்பத்தியில் இடம்பெறும் செப்பேட்டுக் குறிப்பு எவ்வூரைச் சார்ந்தது?
2. வடமொழிக் காப்பியங்கள் யாவை?
3. சங்கக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்ததை எதன் மூலம் அறியலாம்?
4. சங்கம் எங்கு அமைக்கப்பட்டது?
5. வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட காப்பியங்கள் எவை?

41) ''வாளால் அறுத்துச் சுடினும்'' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. **(அல்லது)**

''சிறுதாம்பு தொடுத்த'' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுச் செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.

42) படம் உணர்த்தும் கருத்துகளை ஐந்து தொடர்களில் நயமுடன் எழுதுக.



## பகுதி - IV (மதிப்பெண்கள் - 16)

***விரிவாக விடையளிக்க:*** **2×8=16**

43) அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) காற்றின் ஆற்றலையும் காற்று மாசடைவதையும் காற்றே எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதை விளக்குக.

44) அ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. **(அல்லது)**

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும், பெருஞ்சித்திரனார் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

*******